மீரிகம பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீரிகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மீரிகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 90 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்க வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணப் பெறுமதி முறையே ரூபா 13,898,264 மற்றும் ரூபா 105,469,302 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் கணக்கில் சரி செய்யப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.31 மற்றும் 3.29 பந்திகளின் பிரகாரம்	2025 இன் கணக்குகளில் சரி செய்யப்படும்.	பந்தியின் தொடர்புடைய குறைபாடுகள் சரி செய்யப்படல் வேண்டும்.

செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது மிகைக்காக சீராக்க வேண்டியிருந்த பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 55,795,811 ஆக இருந்த போதும் ரூபா 57,118,364 ஆக சீராக்கப்பட்டமையும், சொத்துக்கள் விற்பனை நட்டம் ரூபா 493,878 மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 6,474,134 சீராக்கப்படாது இருக்கும் போதும் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சலுக்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 4,768,323 சீராக்கப்பட்டிருக்கா திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வேலைக் கடன் பட்டோர் ஒதுக்கீடுகளின் பெறுமதி ரூபா 773,628 மீளாய்வாண்டில் சரி செய்யும் போது மூலதன மாணியக் கணக்கிற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	வீதி, பாலம், மதகுகளாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 3,915,750 ஆன கட்டிட பெறுமதி சரி செய்யும் போது அதற்குரியதாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த பெறுமானத் தேய்வு ரூபா 1,174,725 வீதி, பாலம், மதகுப் பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	கணக்கீடு செய்யப்படாது இருந்த 2 கட்டிடங்களின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 2,697,111 கணக்கீடு செய்யும் போது திரண்ட நிதியத்தில் வரவு வைப்பதற்குப் பதிலாக ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	கட்டிட நிர்மாணம் மற்றும் மறுசீரமைத்தல் பெறுமதி ரூபா 8,959,169 வீதிகள், பாலங்கள், மதகுகளாகக் காண்பிக்கப்பட்டதுடன் ரூபா 1,838,287 ஆன கட்டிடப் பெறுமதி செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

(உ)	செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 438,512 கட்டிடம் மற்றும் வேலைக் கடன் கொடுத்தோர் ஆக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஊ)	சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 62,000 காணியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி மீதியை சரி செய்தல் ரூபா 49,907 ஆதனவரி கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைத்தலும் ஆதனவரி சிட்டையிடல் சரி செய்தல் ரூபா 83,499 ஆதனவரிக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் செலவும் வைக்கப்பட்டிருந்தது.	திரண்ட நிதியம் வரவு வைத்தல் ரூபா 49,907 மற்றும் செலவு வைத்தல் ரூபா 83,499 ஆக இருந்தது.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371	1991 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இருந்து காணப்படுகின்ற தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதி ரூபா 5,407,709 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உரிய தகவல்கள் கண்டறிய முடியாது உள்ளது.	தகவல்களைக் கண்டறிந்து முற்பணம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 69,512,208 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,416,743 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்வுட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்ப ட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்ப ட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	19,280	18,939	16,992	8,438	15,019	14,297	9,642	7,130
ii.	வாடகை	38,903	43,838	34,458	15,274	30,101	33,172	33,959	6,033
iii.	அனுமதிப்பத்தி ரக் கட்டணம்	2,350	1,981	1,975	66	2,150	2,318	1,771	60
iv	ஏனைய வருமானம்	23,290	25,244	23,568	896	34,442	30,541	30,559	0
		83,823	90,002	76,993	24,674	81,712	80,328	75,931	13,223

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரிக் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 8,688,388 தொகையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,264,364 உம், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 2,790,961 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 664,475 உம், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 1,569,230 உம், ஒரு ஆண்டுக்கு குறைந்த ரூபா 2,399,358 உம் காணப்பட்டது.	உப அலுவலகங்களின் நிலுவையில் 13 சதவீதம், 24 சதவீதம், 38 சதவீதம் மற்றும் 31 சதவீதம் 2025 மே 19 ஆம் திகதியில் அறவிடப்பட்டுள்ளது.	நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 57,882 ஏக்கர் வரி மீதியில் ஆண்டில் ரூபா 26,293 அறவிடுவதற்கும், ஆண்டில் சிட்டையிடல் ரூபா 32,582 தொகையில்	உப அலுவலகங்களின் நிலுவையில் 13 சதவீதம், 24 சதவீதம், 38 சதவீதம் மற்றும் 31 சதவீதம் 2025 மே 19 ஆந்	நிலுவை ஏக்கர் வரி வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

	ரூபா 14,681 அறவிடப்பட்டமையால் அறவிடல்களின் செயல்முன்னேற்றம் 45 சதவீதம் ஆன குறைந்த செயல் முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது.	திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டுள்ளது.	

(ஆ) வூடகை

(i)	நிலுவை கடை வாடகை ரூபா 14,526,725 மீதியில் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையே ரூபா 7,288,325 உம், 01 இற்கும் குறைந்த ரூபா 7,238,400 உம் காணப்பட்டது.	மதிப்பீடு திருத்தப்பட்ட பின்னர் அறவிடுவதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை கடை வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.
(ii)	05 வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற இறைச்சிக் கடை, மீன் கடை நிலுவை கேள்வி வாடகை ரூபா 659,156 அறவிடப்பட்டிருக்க வில்லை.	சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதாக கேள்வி வாடகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவை கேள்வி வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

(இ) அனுமதிப் பத்திரக் கட்டணம்

	நிலுவை கைத்தொழில் வரி மீதி ரூபா 44,330 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும் நிலுவை வியாபார அனுமதிப் பத்திர மீதி ரூபா 59,725 தொகை 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து காணப்பட்ட போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைக் கைத்தொழில் வரி மற்றும் வியாபார அனுமதிப் பத்திர வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

(ஈ) ஏனைய வருமானம்

	2020 ஆம் ஆண்டின் பின்னைய ஆண்டுகளுக்கு உரிய நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நீதிமன்ற தண்டப் பண வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கிடைக்கப் பெற்ற 576 பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு இடையே 288 முறைப்பாடுகளுக்கு மாத்திரம் தீர்வு வழங்கப்பட்டிருந்தது.	288 முறைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	சகல பொது மக்கள் முறைப்பாடுகளுக்கும் தீர்வு வழங்குதல் வேண்டும்.

(ஆ)	1980 இன் 56 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக 2022 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2264/18 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் மூலம் தீர்மானிக்கப்பட்ட பட்டோலையின் (இ) பகுதியின் சுடலைக் கூடங்களை உள்ளடக்கி இருந்த போதும் சபையின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்ற சுடலைக் கூடங்கள் தொடர்பாக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்க வில்லை.	காணிக்கு உரித்துறுதி காணப்படாது இருந்தமை பிரச்சினைக்குரியதாக இருந்தது.	பிரச்சனைகளைத் தீர்த்து சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வேலைக் கடன் பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மீதி ரூபா 25,865,515 தொகையில் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 3,359,621 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 995,000 உம், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 286,847 உம் காணப்பட்டது.	ரூபா 2,083,845 அறவிடப்பட்டுள்ளது.	கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வேலைக் கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மீதி ரூபா 33,186,861 தொகையில் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 3,873,354 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 1,781,029 உம், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 533,431 உம், 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 23,149,087 உம் ஆகும்.	01 வருடத்திற்கு குறைந்த மீதியில் ரூபா 2,007,362 செலுத்தப்பட்டுள்ளது	கடன்கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.
(இ)	கடை உரிமையாளர்களினால் நேரடியாக வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்ட ரூபா 199,150 சரியான இனங்காணப்படாமல் 2023 ஆம் ஆண்டு முதல் நானாவித வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடை உரிமையாளர்களை குறித்தவாறு இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2023 யூலை 14 ஆந் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் புதிய மதிப்பீட்டின் கீழ் 34 கடைகளின் கடை வாடகை சிட்டையிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவைக் கடை வாடகைகளின் பெறுமதி ரூபா 2,959,500 ஆகும்.	மாதாந்த வாடகை மீண்டும் திருத்தப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கை செய்த நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கடை உரிமையாளர்களால் கொரிடோவை மேவுகை செய்யும் வகையில் 09 கடைகள் வீதி வரை விரிவுபடுத்தப்பட்டிருந்த போதும் சபை சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	எதிர் வரும் சபை அமர்வில் இறுதியில் தீர்மானம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றப்படல் வேண்டும்.
(இ)	180 சதுர அடி அளவான கடையின் இரண்டு மாடி கட்டிடமாக மாற்றுவதற்கு 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதிகரிக்கப்பட்ட சதுர அடி அளவான 838.49 சதுர அடிக்காக ரூபா 838,490 செலுத்துமாறு கடை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் செலுத்தப்படாத இருந்ததுடன் கட்டிடத்தின் அங்கீகாரம் இன்றி 03 மாடிகள் வரை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் சபை அமர்வின் இறுதியில் தீர்மானம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றப்படல் வேண்டும்.
(ஈ)	தனி மாடி கடையினை திருத்தி அமைப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது சபை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் பௌதீக பரிசோதனை வரையில் மூன்று மாடியாக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. 2023 இன் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 12,300 வீதம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் தற்காலிக மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தனிப்பட்ட தரை மாடிக்காக அறவிடப்பட்ட மாதாந்த வாடகை	மதிப்பீடு எதிர்ப்புகள் திணைக்களத்தற்கு அனுப்பப்பட்டதுடன் அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்து கொள்வதற்கும் வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை செய்து கடை வாடகை அறவிடப்படல் வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	ரூபா 750 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருந்தது.		
(உ)	அளவு அடி 11x9 ஆன கடை 2000 ஆம் ஆண்டின் போது சபை அங்கீகாரம் இன்றி முழுமையாக உடைத்து அகற்றப்பட்டு அடி 24x18 கடையாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது கடையின் மூன்றாவது மாடி வரை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் வாடகையாளரிடம் இருந்து செலவினங்களைச் செய்து கடை அபிவிருத்தி செய்யப்பட்ட போதும் சபை சமர்ப்பித்த மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை செலுத்த வேண்டியிருந்தமையை குறிப்பிட்டு முன்மொழிவு ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை 2023 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் ரூபா 21,000 ஆக திருத்த வேண்டியிருந்த போதிலும் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கும் வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வரி எதிர்ப்புகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கும் வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை செய்து கடை வாடகை அறவிடப்படல் வேண்டும்.
(ஊ)	முற்பணம் அறவிடல் உடன்படிக்கை செய்த பின்னர் கடைகளின் சாவிகள் வழங்கப்படாமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்ட 29 கடைகளின் நிலுவை முற்பண மீதி ரூபா 36,555,174 அறவிடப் பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆலோசனையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.	நிலுவை முற்பணம் அறவிடப்படல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நில அளவு சதுர அடி 3,823 மற்றும் பெறுமதி ரூபா 15,000,000 ஆன பல்லேவல வாராந்த சந்தை குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுடன் சந்தை வளவில் அமைந்துள்ள காணியில் 33.37 பேர்ச் தபால் அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக எந்த ஒரு நில வாடகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	தபால் அலுவலகம் வளவில் உரிமை மாத்திரம் கம்பகா பிரதேச தபால் அத்தியட்சகருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.	சொத்துக்களை ஆக்க பூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும்.

(ஆ)	ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 26.76 மில்லியன் செலவில் 2019 ஆம் ஆண்டின் போது சபை வளவில் நிர்மாணிக்கப்பட்ட சபையின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்ற குடிநீர் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்து 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நீர் மூலத்தை கண்டறியாமையால் செயலிழந்து காணப்பட்டதுடன் தோல்வி அடைந்து காணப்படுதல் சபைக்குரிய நீர் பௌசர் மூலம் செயற்திட்டத்திற்கு நீர் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் எரிபொருள் செலவினம் மாத்திரம் ரூபா 1,008,748 செலவிடப்பட்டிருந்தது.	மாற்று நீர்மூலம் காணப்படுகின்றதா என கண்டறியப்படுகின்றது.	சொத்துக்கள் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	சதுர அடி 6,400 மற்றும் ரூபா 10,500,000 பெறுமதியான இரண்டு மாடி புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியின் தரை மாடியில் 26 கடைகளுக்கு இடையே 15 கடைகள் மூடப்பட்டிருந்தது.	கடைகளை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கையேற்று மீண்டும் கேள்வி கோருதல் வேண்டும்.
(ஈ)	இயற்கை உணவகம் சுகாதார பாதுகாப்புத் திட்டத்தை பயன்படுத்தாமல் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், பதிவு செய்த பெண்கள் யாவரும் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கும், இயற்கை உணவகத்தில் மற்றும் அதன் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காமைக்கும் கட்டிடத்தில் நுழைவு பகுதியில் கடை நிர்மாணித்து பேக்கரி உற்பத்தி விற்பனைக் கடை ஒன்றை கேள்வி கோரி வழங்கப்பட்டமையால் இயற்கை உணவகத்திற்கு வருகை தருகின்ற நுகர்வோர்கள் அதற்கு செல்கின்றமை அவதானிக்கப்பட்டமையால் நிர்மாணக் கிரயம் ரூபா 3,915,750 ஆன இயற்கை உணவகம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் உடன்படிக்கை தயாரித்து கூறு விலை கோரி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுகாதார பாதுகாப்புத் திட்டத்தை கொண்டிருக்க வேண்டியிருந்ததுடன் சொத்துக்கள் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பல்லேவல புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் மேல் மாடியில் 03 கடைகள், பின் பக்கத்தில் 05 அடி வீதம் விரிவாக்கி வியாபார கட்டிடத் தொகுதியில் மேல் மாடியில் செல்வதற்கு தயாரிக்கப்பட்டிருந்த படிக் கட்டுகளில் நுழைவினை மேவுகை செய்து சுவர் ஒன்று கட்டப்பட்டிருந்ததுடன் கீழ் மாடியில் 05 கடைகளில் 09 அடி நீள அளவில் கொரிடோர் கண்ணாடி மற்றும் வலைகள் அனுமதியற்ற வகையில் மேவுகை செய்யப்பட்டிருந்த போதிலும் சபை அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	கடை உரிமையாளர்களை வரவழைத்து கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும்.	அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றி சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	பெறுமதி ரூபா 1,800,000 ஆன கட்டிடம் மற்றும் பெறுமதி ரூபா 3,400,000 ஆன காணியின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் உரித்தைக் கையேற்று பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(இ)	2024 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 70 வகையான சொத்துக்களில் 278 சொத்துக்கள் உரிய அலுவலகங்களின் பொருள் பதிவேடுகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	பொருள் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பதிவேடுகளில் உள்ளடக்குதல் வேண்டும்.
(ஈ)	சொத்து மெய்மையாய்வு அறிக்கையின் படி சபையின் பெயரில் காணப்படாத காணி நிதிக்கூற்றுக்களில் 02 காணியாக ரூபா 33,200,000 தொகையும், 02 மண்டபங்கள் சபைக்குச் சொந்தமான காணிகளில் நிர்மாணிக்கப்படாது இருந்த போதிலும் கட்டடங்களின் பெறுமதியாக ரூபா 2,487,425 தொகையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் மெய்மையாய்வு பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பெறுமதி ரூபா 35,379 ஆன 88 புத்தகங்கள் தொலைந்து போயிருந்த போது ரூபா 100,000 ஆன கடைகள் பௌதீக ரீதியில் காணப்படாது இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	03 மாதங்களில் புத்தகங்களில் சமர்ப்பிக்கப்படாது இருந்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் ஆவணப் பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிபிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஆரம்ப தரத்தில் 13 பதவிகளில் வெற்றிடங்களும், இரண்டாம் தரத்தில் 02 பதவிகளில் மிகையும் காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையினை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற 08 ஊழியர்களிடம் இருந்து ரூபா 1,006,274 கடன் மற்றும் முற்பண மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊழியர் கடன் அறவிடப்படல் வேண்டும்.

3.7 வாகனப் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள .	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	டெக்டரை பழுது பார்ப்பதற்காக திறந்த கூறுவிலை கோராமல் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 2024 சனவரி 30 ஆந் திகதி ரூபா 442,000 தொகையும், 2024 செப்தெம்பர் 26 ஆந் திகதி ரூபா 144,900 தொகையும், திகதி இன்றிய கடிதம் மூலம் ரூபா 125,000 தொகையும் மதிப்பீடு பெறப்பட்டு இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரையினைப் பெற்றுக் கொள்ளாமல் 2024 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் குறைபாடுகளை சரி செய்யப்படும்.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான 04 முச்சக்கர வண்டிகளின் மீற்றர் மாணி செயலிழந்து காணப்பட்டதுடன் அது தொடர்பாக போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	வாகனங்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும்.